செ.வெ.எண்:43 நாள்:19.06.2019

# பத்திரிக்கை செய்தி

கரூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக, உணவுப் பாதுகாப்பு துறை அதிகாரிகள் எனக் கூறிக்கொண்டு, உணவு வணிகர்களிடம் பணம் பறிப்பதாக பல்வேறு புகார்கள் பெறப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில், வாங்கல் பகுதியில், ஒரு பேக்கரியில் பதிவாகியிருந்த காட்சிகளின் அடிப்படையில் காவல் துறையினரிடம் புகார் அளிக்கப்பட்டு கடந்த வாரத்தில், இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனவே, அனைத்து உணவு வணிகர்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால், இதுபோன்று நிகழ்வுகளில், உடனடியாக கீழ்கண்ட கரூர் மாவட்ட உணவுப் பாதுகாப்பு துறை அலுவலர்களின் அலைபேசி எண்களில் தொடர்புகொண்டு விழிப்புணர்வு அடைய அறிவுறுத்தப்படுகிறது.

<u>உணவுப் பாதுகாப்பு துறை அலுவலர்கள் விவரம் :</u>

மரு.இரா.சசிதீபா, மாவட்ட நியமன அலுவலர் – 88256 60862, திரு.க. சக்தீஸ்வரன், உணவுப் பாதுகாப்பு அலுவலர் (அரவக்குறிச்சி வட்டாரம் மற்றும் தாந்தோணி வட்டாரம்) – 96298 03197, திரு. பா.சுரேஷ்கண்ணன், உணவுப் பாதுகாப்பு அலுவலர் (க.பரமத்தி வட்டாரப் பகுதி, குளித்தலை நகரம் மற்றும் குளித்தலை வட்டாரப் பகுதி ) – 99941 33521, திரு. மு.சி.முருகேசன், உணவுப் பாதுகாப்பு அலுவலர் (கிருஷ்ணராயபுரம் வட்டாரம், தோகமலை வட்டாரப் பகுதி, கடவூர் வட்டாரப் பகுதி, கரூர் நகரம் மற்றும் கரூர் வட்டாரப் பகுதி) – 99435 66724.

மேலும், மாவட்ட ஆட்சியரக வளாகம், இணைப்புக் கட்டிடம், அறை எண்.**66**–ல் உள்ள உணவுப் பாதுகாப்பு துறைக்கு நேரிடையாகவோ அல்லது **04324 – 255347** என்ற எண் அல்லது **94440 42322** என்ற வாட்ஸ்அப் புகார் எண்ணிலோ தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கும்படியும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.